
## செழிப்பான லாபம் கொடுக்கும் செண்டுமல்லி

## 10.05.2013




பணியில் இருக்கும், ஐம்பது வயதை நெருங்கிய பெரும்பாலானோரின் கவலை, பணி ஓய்வுக்குப் பிறகான வாழ்க்கையைப் பற்றித்தான் இருக்கும். ஆனால், முறையாகத் திட்டமிட்டால், ஓய்வுக்குப் பிறகும் நிறைவான வாழ்க்கை வாழ முடியும் என்பதை பலர் நிரூபித்துள்ளனர். அந்த வகையில் தனது செயல்பாடுகளால் மனநிறைவான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார் புதுக்கோட்டை மாவட்டம் , பூங்குடி கிராமத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன். தமிழக காவல்துறையில் துணை ஆணையாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற இவர் தற்பொழுது முழுநேர விவசாயி.

பசுமை வயல்களுக்கு இடையில் மண்புழு உரத்தை சலித்துக் கொண்டிருந்தார் பாலகிருஷ்ணன். எட்டு ஏக்கர் நிலத்தில் நான்கு வருடமாக விவசாயம் பார்க்கிறார். நான்கு ஏக்கரில் தென்னை இருக்கிறது. ஒரு ஏக்கர் தென்னையில் மட்டும் ஊடுபயிராக மா இருக்கிறது. கரும்பைத் தவிர, மற்ற பயிருக்கெல்லாம் இயற்கை உரங்களைத்தான் கொடுக்கிறார். ஒரு ஏக்கர் நிலத்தில் வழக்கமாக நெல் போடுகிறார். நெல் சாகுபடியில் பெரிதாக இலாபம் இருப்பதில்லை என்கிறார் பாலகிருஷ்ணன். கரண்ட் இல்லாத காலத்திலும் சிரமப்பட்டு பராமரித்தாலும் அறுவடை செய்த பிறகு, ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபாய் இலாபம் கிடைப்பதே கஷ்டம் என்கிறார். அதனால் நெல்லுக்கு பதிலாக செண்டுமல்லி சாகுபடி செய்திருக்கிறார். குறைவான தண்ணீர், பராமரிப்பிலேயே நல்ல இலாபம் கிடைக்கிறது.

தோட்டக்கலை துறை உதவி இயக்குநர் குருமணியும், வேளாண் அலுவலர் அண்ணாமலையும்தான் இந்த செண்டுப் பூவை இவருக்கு அறிமுகப்படுத்தியுள்ளனர். அரை ஏக்கர் நிலத்தில் செண்டு மல்லி சாகுபடி செய்யும் முறையை விவரித்தார்.

**ஒரு விதை ஒரு நாற்று**

செண்டு மல்லியின் வயது 120 நாட்கள். அரை ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்ய 2 ஆயிரத்து 500 விதைகள் தேவைப்படும். ஒரு விதையில் இருந்து ஒரு நாற்றுதான் உற்பத்தி செய்ய முடியும். நாற்று தயாரிப்புக்காக உள்ள பிரத்யேகமான பிளாஸ்டிக் குழித்தட்டில் ஒவ்வொரு குழியிலும் முக்கால் பகுதிக்கு தென்னை நார்க் கழிவை நிரப்பி ஒவ்வொரு விதையை வைத்து, ஈரமான நார்க் கழிவை போட்டு குழியை நிரப்ப வேண்டும். (குழித்தட்டு கிடைக்காதவர்கள், சிறிய பிளாஸ்டிக் டீக்கப்பைப் பயன்படுத்தலாம்).

எப்பொழுதும் ஈரம் இருக்கும் அளவிற்கு தண்ணீர் தெளித்து வந்தால், 23-ம் நாள், நாற்று நடவுக்கு தயாராகி விடும். சாகுபடி நிலத்தில், ஒன்றரை டன் அளவுக்கு மண்புழு உரம் அல்லது குப்பை எருவை இட்டு, இரண்டு சால் புழுதி உழவு ஓட்டி, ஒன்றே கால் அடி அகலம், முக்கால் அடி உயரத்திற்கு இரண்டு அடி

இடைவெளியில் பார் அமைக்க வேண்டும். நிலத்தின் அமைப்பிற்கு ஏற்ப பாரின் நீளத்தை அமைத்துக் கொள்ளலாம்.



குப்பைகள் தூளாக்கப்படுகிறது...

**2 அடி இடைவெளி**

நிலத்தில் தண்ணீர் விட்டு எல்லா பார்களிலுமே ஒரே சீராக இடது அல்லது வலது ஓரத்தில் மட்டும், 2 அடி இடைவெளியில் நாற்றுகளை நடவு செய்து 3-ம் நாள் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பிறகு, நான்கு நாட்களுக்கு ஒரு முறை பாசனம் செய்ய வேண்டும். 7-ம் நாள் அரை அடி உயரத்திற்கு செடி வளர்ந்திருக்கும். 8 மற்றும் 30-ம் நாட்களில் களையெடுத்து, ஒவ்வொரு செடிக்கும் தலா ஒரு கையளவு மண்புழு உரத்தை வேர் பகுதியில் வைத்து, மண் அணைக்க வேண்டும்.

**பதினெட்டாம் நாளில் இருந்து அறுவடை**

18-ம் நாளில் இருந்து தினமும் பூவை அறுவடை செய்யலாம். 25-ம் நாள் பூண்டு, பச்சை மிளகாய் கரைசலை 1:40 என்ற விகிதத்தில் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். (தலா ஒரு கிலோ பூண்டு, பச்சைமிளகாய், வேப்பம்பிண்ணாக்கு ஆகியவற்றை ஒன்றாக உரலில் இட்டு இடித்து பானையில் இட்டு ஒன்றரை லிட்டர் தண்ணீர் ஊற்றி இறுக்கமாக வேடு கட்டி விட வேண்டும். 3 நாட்கள் கழித்து, இக்கலவையை எடுத்துப் பயன்படுத்தலாம்). இதனால் பூச்சிகள் தாக்காது.
50-ம் நாள், 100 கிலோ மண்புழு உரம், மண்புழு உரம் சலித்து எடுக்கப்பட்ட 100 கிலோ குப்பை எரு ஆகியவற்றைக் கலந்து, ஒவ்வொரு செடியின் வேர்ப்பகுதியிலும் பகிர்ந்து போட வேண்டும். நிலத்தை இரண்டாகப் பிரித்து சுழற்சி முறையில் அறுவடை செய்ய வேண்டும்.
சாகுபடி பாடம் முடித்த பாலகிருஷ்ணன் இது வீரிய இரக செண்டி பார்ப்பதற்கு அழகாக மஞ்சள் நிறத்தில் பளிச்சென்று கண்ணைப் பறிக்கும். இயற்கை இடுபொருள்களை மட்டும் கொடுப்பதினால், இங்கு விளையும் செண்டி பூ, பறிச்ச பிறகும் மூன்று நாட்களுக்கு வாடாமல் இருக்கும். சுழற்சி முறையில் பறிப்பதினால் தினமும் சராசரியாக 20 கிலோஅளவுக்கு பூ கிடைக்கிறது. பறிப்பதற்கு இரண்டு ஆட்கள் போதும். பூ நன்றாக பெரிதாக இருப்பதினால் பறிக்கவும் சுலபம். வேலைக்கு ஆட்கள் கிடைக்காவிட்டாலும் நாமே பறிக்கலாம் என்கிறார்.
இவரிடம் ஒரு மாடுதான் இருக்கிறது. வெளியில் ஒரு டன் சாணத்தை 700 ரூபாய் என்று வாங்குகிறார். அதோடு மெஷினில் போட்டு தூளாக்கின மா, தேக்கு சருகுகள், கரும்புத் தோகைகள் எல்லாவற்றையும்

கலந்து மண்புழு உரம் தயாரிக்கிறார். இப்படி கிடைக்கும் மண்புழு உரத்தை ஒரு கிலோ 10 ரூபாய் என்று விற்கிறார். மாதத்திற்கு 600 கிலோ அளவுக்கு விற்பனை ஆகிறது. மண்புழு உரத்தை சலித்ததற்குப் பிறகு கிடைக்கும் குப்பை எருவை பயிர்களுக்கு போடுகிறார்.

**40 ஆயிரம் இலாபம்**

நடவில் இருந்து இப்பொழுது 48 நாட்களுக்கு மேல் ஆகிறது. இதுவரைக்கும் 600 கிலோ அளவுக்கு மகசூல் கிடைத்திருக்கிறது. புதுக்கோட்டை பூ மார்க்கெட்டில் ஒரு கிலோவுக்கு சராசரியாக 50 ரூபாய் அளவுக்கு விலை கிடைக்கிறது. இன்னும் 50 நாட்களுக்கு பூ பரிக்கலாம். எப்படிப் பார்த்தாலும், இன்னும் 600 கிலோ அளவுக்குக் கிடைக்கும்.

நடவு செய்த இரண்டாவது வாரத்தில் கடுமையபன புயல், மழையடித்து பெரும்பாலான செடிகள் கீழே சாய்ந்துவிட்டது. தேங்கியிருந்த தண்ணீரை வடிகட்டி மறுபடியும் செடிகளை நிமிர்த்தி வைத்துள்ளனர். மீண்டும் வளரத் தொடங்கியது. வளர்ச்சி வேகம் குறைந்ததால் எதிர்பார்த்த அளவுக்கு மகசூல் கிடைக்கவில்லை. அப்படியிருந்தும் இந்த அரை ஏக்கரில் இது வரை 30 அயிராம் ரூபாய் கிடைத்திருக்கிறது. இன்னும் 30 ஆயிரம் ரூபாய்க்கு பூ கிடைக்கும். மொத்தம் 60 ஆயிரம் ரூபாய். செலவு போக, 40 ஆயிரம் ரூபாய் இலாபமாக கிடைக்கும். புயல் அடிக்காமல் இருந்திருந்தால் இன்னும் அதிகமான இலபாம் கிடைத்திருக்கும்.

**தொடர்புக்கு**
**பாலகிருஷ்ணன்**
**அலைபேசி : 98659-38452**